# படல்கும்புர பிரதேச சபை
# மொனராகலை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஆகஸ்ட் 09 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மே 13 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 நவம்பர் 20 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள எனது இவ்வறிக்கையில் காணப்படும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள படல்கும்புர பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 45,677,561 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 205,969 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 351,676 ஆக இருந்தது.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்குரிய நிதிக் கூற்றுக்களின் பெறுமதி மற்றும் பாதீடு செய்யப்பட்ட பெறுமதி என்பவற்றை இணக்கஞ் செய்த போது 08 வருமான விடயங்களில் 25% தொடக்கம் 459% வரையிலும், 06 செலவின விடயங்களில் 63% தொடக்கம் 1187% வரையிலும் முரண்கள் அவதானிக்கப்பட்டன. இதன் பிரகாரம் பாதீடானது வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 890 | 178 | 712 |
| (ii) | வாடகை | 190 | 2,411 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 719 | 613 | 106 |
| (iv) | ஏனைய வருமானம் | 1,264 | 1,665 | - |

### 2.3.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 460,832 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 960,969 |

### 2.3.3 வாடகை வருமானம்

--------------------------------

(அ) பிரதேச அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் 2008 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட படல்கும்புர வியாபாரத் தொகுதியில் 16 கடைகளுக்குரிய உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் சபையின் சொத்தாக பொறுப்பேற்கப்படாதிருந்ததுடன் 2012 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரை கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமல் மூடி வைக்கப்பட்டிந்தன.

(ஆ) நக்கல வாராந்த சந்தை மற்றும் 05 கடைகள் என்பவற்றிலிருந்து நீண்ட காலமாக அறவிடவேண்டிய கடை வாடகை ரூபா 97,068 தொகையினை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) படல்கும்புர மாட்டிறைச்சிக் கடையில் 2011 திசெம்பா்ா 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை வாடகையான ரூபா 113,375 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.4 செயற்பாடற்ற பௌதீக வளங்கள்

--------------------------------------------------------

ரூபா 307,000 பெறுமதியான வாகனம், இயந்திர உபகரணங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பன செயற்பாடற்றுக் காணப்பட்டமை பௌதீக வளங்கள் தொடர்பான தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்டன.

## 2.5 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

(அ) 2006 ஏப்ரல் 10, 2006 மே 26, 2006 ஆகஸ்ட் 01 மற்றும் 2007 ஆகஸ்ட் 01 ஆந் திகதிகளின் முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபங்களின் முறையே 28, 28(i), 28(ii) மற்றும் 36 ஆம் இலக்கங்களுக்கு முரணாகவும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 19(1) (i) ஆம் பிரிவின் பிரகாரமும் உள்ளூராட்சி ஆனையாளரின் எழுத்துமூல முன் அங்கீகாரம் இன்றி 05 அமைய சுகாதாரத் தொழிலாளர்கள், 03 நூலக உதவியாளர்கள், ஒரு கணனி செயற்படுத்துனர் மற்றும் ஒரு தட்டச்சாளர் என்போர் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திலிருந்து ரூபா 635,500 தொகை சம்பளம் மற்றும் படிகளாகச் செலுத்தப்பட்டிருந்தன.

(ஆ) படல்கும்புர மிருக ஊசிமருந்து ஏற்றுபவருக்கு மாதமொன்றிற்கு மாத்திரம் ரூபா 1,500 எரிபொருள் படி செலுத்துவதற்கு உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 ஆகஸ்ட் 26 ஆந் திகதிய 12/ஆ/15/பிராபா/09 ஆம் இலக்க கடிதத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக 2010 செப்தெம்பர் தொடக்கம் 2011 ஆகஸ்ட் வரை ஒரு வருட காலத்திற்காக ரூபா 18,000 எரிபொருள் படி செலுத்தப்பட்டிருந்தன.

(இ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132 (ஔ) மற்றும் (கா) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக அமைச்சரின் எழுத்துமூல முன்அங்கீகாரம் பெறப்படாமல் 07 சந்தர்ப்பங்களினல் ரூபா 46,388 தொகை நலன்புரிச் செலவினம் செய்யப்பட்டிருந்தன.

## 2.6 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

(அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.14 ஆம் பிரிவு மற்றும் அதற்குரிய கைநூலின் 2.14.1 ஆம் பிரிவுகளின் பிரகாரம் ஆகக் குறைந்தது 05 கூறுவிலைகள் பெறப்படவேண்டியிருந்த போதிலும் 03 கூறுவிலைகள் மாத்திரம் பெறப்பட்டு ரூபா 222,395 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) மொனராகலை மாவட்ட கைப்பணி அலுவலகத்தில் சேவையாற்றுகின்ற ஊழியருக்கு 2009 பெப்ரவரி தொடக்கம் 2011 திசெம்பர் 31 வரை பிரதேச சபையின் ஊடாக சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 635,495 தொகை செலுத்தப்பட்டிருந்தன.

## 2.7 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

---------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 03 வருமானக் கட்டுப்பாட்டாளர்களினால் பிரதேசங்களில் சேகரிக்கப்பட்ட ரூபா 151,677 தொகையான பணத்தை அலுவலகத்திற்குக் கையளிக்கும் போது 6 - 30 நாட்கள் வரையான காலதாமத்தைக் கொண்டிருந்தன.

(ஆ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய ஊழியர் கடன் மற்றும் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,919,831 ஆக இருந்ததுடன் 01 வருட காலத்தை விஞ்சி அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,813,414 ஆக இருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 22,581,570 கூட்டுத்தொகையான நிலுவை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2006 ஆம் ஆண்டில் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் தேறாத ரூபா 33,473 பெறுமதியான 03 காசோலைகள் தொடர்பாக கண்டறிந்து அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் வருமானத்திலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தன.

(உ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காசேட்டின் மீதி ரூபா 36,726 மறைப் பெறுமதியாக இருந்தது.

(ஊ) 05 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட உப கட்டுநிதி ரூபா 72,800 தொகையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(எ) ரூபா 141,940 தொகையான கொள்வனவுகள் பொருட்பதிவேடு/ இருப்புப் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருடகாலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 814,346 ஆக இருந்தது.

(ஐ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதி 203 இன் பிரகாரம் சபையின் சொத்துக்கள் தொடர்பாக முழுமையான மெய்மையாய்வு மற்றும் 214 ஆவது விதியின் பிரகாரம் களஞ்சியப் பொருட்கள் தொடர்பாகவும் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்